| | | | |
|---|---|---|---|
| பள்ளிக்கல்வித்துறை – பெரம்பலூர் மாவட்டம் - ஏழாம் வகுப்பு | | | |
| தமிழ் – இரண்டாம் பருவத் தேர்வு – 2024 - 2025 | | | |
| உத்தேச விடைக்குறிப்புகள் | | | |
| பகுதி - I | | | |
| I | சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. | | 6 x 1 = 6 |
| அ | விடைகள் | | |
| 1 | அ | நெடி | 1 |
| 2 | இ | திரும்புகையில் | 1 |
| 3 | இ | ஆறு | 1 |
| 4 | ஆ | காலமறிதல் | 1 |
| 5 | இ | முந்நீர் | 1 |
| 6 | ஆ | மரக்கலங்கள் | 1 |
| ஆ | கோடிட்ட இடங்களை நிரப்புக. | | 2 x 1 = 2 |
| 7 | நங்கூரம் | | 1 |
| 8 | துணி ஓவியம் | | 1 |
| இ | பொருத்துக. | | 4 x 1 = 4 |
| 9 | இயற்சொல் - சோறு | | 1 |
| 10 | திரிசொல் - அழுவம் | | 1 |
| 11 | திசைச்சொல் - பெற்றம் | | 1 |
| 12 | வடசொல் - இரத்தம் | | 1 |
| II | எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்க. | | 4 x 2 = 8 |
| 13 | இரவு | | 2 |
| 14 | எடை குறைந்த பெரிய மரங்களின் உட்பகுதியைக் குடைந்து எடுத்துவிட்டு தோணியாகப் பயன்படுத்தினான் மனிதன்.<br>உட்பகுதி தோண்டப்பட்டவை என்பதால் அவை தோணிகள் எனப்பட்டன. | | 2 |
| 15 | தமிழ்மொழி இலக்கண இலக்கிய வளம் உடையது.<br>நாமும் படைப்பாற்றல் மிக்கவர்களாக ஆகலாம்.<br>தாய் மொழியாகிய தமிழில் படிப்பதால் எளிதில் புரிவதுடன் கற்றவற்றைப் பிறருக்கும் எடுத்துரைக்க முடியும்.<br>தாய்மொழியாகிய தமிழிலேயே படிப்பதால் சிறப்புப் பயிற்சி தேவை இல்லை.<br>ஒப்பிட்டு அறிவதற்கு உரிய நூல்களை நூலகங்களில் நாமே தேடிப் படித்துக் கொள்ளலாம் | | 2 |
| 16 | துன்பம் வந்தபோது வருந்திக் கலங்காதவர் அந்த துன்பத்திற்குத் துன்பம் உண்டாக்கி அதனை வென்று விடுவார். | | 2 |
| 17 | மானுடன் இல்லாத எந்த அழகும் அழகன்று.<br>மனிதன் கலக்காத எதிலும் உயிர்ப்பில்லை.<br>எனவே கலை மனிதன் கலக்கும் போது உயிர்ப்புடையதாக அமையும். | | 2 |
| 18 | கரிக்கோல், நீர் வண்ணம், எண்ணெய் வண்ணம் இவற்றைக் கொண்டு தாள் | | 2 |

| | | |
|---|---|---|
| | ஓவியங்களை வரைவர். | |
| III | எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க. | 2 x 2 = 4 |
| 19 | பெயர் இயற்சொல், இடை இயற்சொல், வினை இயற்சொல், உரி இயற்சொல் | 4 |
| 20 | ஓர் எழுத்து பொருள் தரும் சொல்லாக அமைவது ஓரெழுத்து ஒரு மொழி எனப்படும்.<br>(எ.கா.) பூ, கை | 2 |
| 21 | முதல்நிலை திரிவதால் உருவாகும் தொழிற்பெயர் முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் எனப்படும்.<br>சான்று – சூடு, சுடு என்னும் பகுதியின் முதல் எழுத்து நீண்டு திரிந்துள்ளது | |
| IV | மனப்பாடப்பகுதி | 4 + 2 = 6 |
| 22 | கலங்கரை விளக்கம்<br>வானம் ஊன்றிய மதலை போல<br>ஏணி சாத்திய ஏற்றருஞ் சென்னி<br>விண்பொர நிவந்த வேயா மாடத்து<br>இரவில் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி<br>உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும்<br>துறை....<br>- கடியலூர் உருத்திரங் கண்ணனார் | 4 |
| 23 | திருக்குறள்<br>தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்<br>கற்றனைத்து ஊறும் அறிவு. | 2 |
| V | எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க. | 2 x 3 = 6 |
| 24 | ❖ உலகம் புடை பெயர்ந்தது போன்ற அழகு பொருந்திய தோற்றத்தை உடையது நாவாய்.<br>❖ அது புலால் நாற்றம் உடைய அலை வீசும் பெரிய கடலின் நீரைப் பிளந்து கொண்டு செல்லும்.<br>❖ இரவும் பகலும் ஓரிடத்தும் தங்காமல் வீசுகின்ற காற்றானது நாவாயை அசைத்துச் செலுத்தும்.<br>❖ உயர்ந்த கரையை உடைய மணல் நிறைந்த துறைமுகத்தில் கலங்கரை விளக்கத்தின் ஒளியால் திசை அறிந்து நாவாய் ஓட்டுபவன் நாவாயைச் செலுத்துவான்.<br>❖ இவ்வாறு கடலில் கப்பல் செல்லும் காட்சியை அகநானூறு விளக்குகிறது. | 3 |
| 25 | ❖ கல்வி ஓர் ஒளி விளக்கு.<br>❖ இருக்கும் இடத்தை ஒளிமயமாக ஆக்குவது.<br>❖ அதனுடைய குறிப்பு என்னவென்றால் ஒருவன் கற்றுவிட்டால், அப்படிக் கற்ற கல்வியைப் பலருக்கும் அளிக்க வேண்டும்.<br>❖ அப்படிப் பலருக்கும் ஒளி தருவதுதான் கல்வி.<br>❖ கல்வி இல்லாத நாடு விளக்கில்லாத வீடு.<br>❖ விளக்கு இல்லாத வீட்டில் யார் குடியிருப்பார்கள்?<br>❖ வீடு இருட்டாக இருக்கும்.<br>❖ அதுபோல் கல்வி இல்லாத குடும்பத்தை யாரும் மதிக்க மாட்டார்கள். | 3 |

| | | |
|---|---|---|
| 26 | ❖ கீரைப் பாத்தியில் மண் கட்டிகளை அடித்துத் தூளாக்குவர்.<br>❖ மண்ணை வெட்டித் தடுத்துப் பாத்திகளாக்கி வைத்திருப்பர்.<br>❖ வாய்க்காலில் மாறிமாறி நீர் பாய்ச்சுவர்.<br>❖ நீர் கடைமடையின் இறுதிவரை சென்று மாற்றி விடத் திரும்பும்.<br>❖ குதிரை, வண்டிகளில் கட்டி அடித்து ஓட்டப்படும்.<br>❖ கால் மாறிமாறி பாய்ந்து செல்லும். எதிரிகளை மறித்துத் தாக்கும்.<br>❖ போக வேண்டிய இடம் முழுவதும் சென்று மீண்டும் திரும்பி வரும்.<br>❖ இக்காரணங்களால் கீரைப்பாத்தியும், ஏறிப் பயணம் செய்யும் குதிரையும் ஒன்றாகக் கருதப்படும் | 3 |
| VI | எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க. | 5 x 2 = 10 |
| 27 | *தொடர்களில் அமைத்து எழுதுக.* | |
| அ | **<u>நீரோட்டம்</u>** உள்ள இடங்களில் வயல்வெளிகள் செழிப்பாக இருக்கும் | 1 |
| ஆ | நாம் நல்ல நூல்களைத் **<u>தேர்ந்தெடுத்துப்</u>** படிக்க வேண்டும் | 1 |
| 28 | *பொருத்தமான காலம் அமையுமாறு திருத்தி எழுதுக.* | |
| அ | ஆசிரியர் நாளை சிறுதேர்வு **<u>நடத்துவார்</u>** | 1 |
| ஆ | நாங்கள் நேற்று கடற்கரைக்குச் **<u>சென்றோம்</u>** | 1 |
| 29 | *ஓர் எழுத்துச் சொற்களால் நிரப்புக.* | |
| அ | **<u>ஆ</u>** புல்லை மேயும் | 1 |
| ஆ | **<u>ஈ</u>** பறக்கும் | 1 |
| 30 | *பின்வரும் எழுத்துகளுக்குப் பொருள் எழுதுக.* | |
| அ | தை - தைத்தல் | 1 |
| ஆ | பா - பாடல் | 1 |
| 31 | *இடைச்சொல் 'ஐ' சேர்த்துத் தொடரை மீண்டும் எழுதுக..* | |
| அ | பாட**<u>லைப்</u>** பாடினாள் | 1 |
| ஆ | கட**<u>லைப்</u>** பார்த்தாள் | 1 |
| 32 | *கலைச்சொல் அறிந்து எழுதுக.* | |
| அ | Artist - கலைஞர் | 1 |
| ஆ | Brush - தூரிகை | 1 |
| VII | ஏதேனும் ஒன்றுக்கு மட்டும் விடையளிக்க. | 1 x 7 = 7 |
| 33 | நூலகம் அமைக்க வேண்டி நூலக ஆணையருக்குக் கடிதம்<br>அனுப்புநர்<br>மு.ஆராதனா,<br>1/32, வடக்குத் தெரு.<br>ஒதியம்,<br>குன்னம் வட்டம்.<br>பெரம்பலூர் மாவட்டம்.<br>பெறுநர்<br>நூலக ஆணையர் அவர்கள், | 7 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | நூலக ஆணையர் அலுவலகம்.<br>அண்ணாசாலை.<br>சென்னை - 2<br>மதிப்பிற்குரிய ஐயா,<br>பொருள்: ஒதியம் கிராமத்தில் பொது நூலகம் அமைத்துத் தர வேண்டுதல் சார்பாக<br>வணக்கம். எங்கள் ஊரில் சுமார் 500 பேர் வசித்து வருகின்றனர். பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் புதிய நூல்கள் கற்க ஆவலாக உள்ளனர். அன்றாட செய்திகளைப் படிக்க பொதுமக்களும் ஆர்வமாக உள்ளனர். ஆனால் படிப்பகமோ நூலகமோ எங்கள் ஊரில் இல்லை.<br>சொந்தமாக நூல்களைப் பணம் கொடுத்து வாங்க இயலாத ஏழை மக்களாகிய எங்களுக்குப் பொதுநூலகம் ஒன்றை அமைத்துத் தருமாறு மிகவும் பணிவுடன் வேண்டுகிறேன்.<br>09-12-2024, தங்கள் உண்மையுள்ள.<br>ஒதியம் மு.ஆராதனா<br>உறைமேலிட்ட முகவரி<br>பெறுநர்<br>நூலக ஆணையர் அவர்கள்,<br>நூலக ஆணையர் அலுவலகம்.<br>அண்ணாசாலை.<br>சென்னை - 2 | |
| 34 | **ஆழ்கடலின் அடியில்**<br>கி.பி. 1886இல் கடலில் செல்லும் ஒரு விந்தையான விலங்கை வேட்டையாடுவதற்காக அமெரிக்காவின் நியூயார்க் நகரில் இருந்து ஒரு போர்க்கப்பல் புறப்பட்டது. அதில் விலங்கியல் பேராசிரியர் பியரி. அவர்தம் உதவியாளர் கான்ரீல், கப்பல் தலைவர் ஃபராகட் திமிங்கலங்களை வேட்டையாடுவதில் வல்லவரான நெட் ஆகியோர் சென்றனர். அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையே உள்ள பெருங்கடல் பரப்பில் மூன்று மாதங்கள் தேடியும் அப்படி ஒரு விலங்கு கண்ணில் படவில்லை.<br>இறுதியில் அவ்விலங்கு தென்பட்டது பீரங்கிக் குண்டுகளாலும் அதன் உடலைத் துளைக்க முடியவில்லை அந்த விலங்கு கப்பலில் மோதிய வேகத்தில் கப்பலில் இருந்து தூக்கி எறியப்பட்டுக்கண் விழித்த போது அந்தக் கொடிய விலங்கின் மீது படுத்திருந்தார்கள் பியரி கன்ரீல் மற்றும் நெட் மோதியது விலங்கல்ல ஒரு நீர் மூழ்கிக் கப்பல் என்று கண்டுபிடித்துவிட்டார் நெட்<br>நீர்மூழ்கிக் கப்பலின் மேல் பக்கத்தில் இருந்த மூடி திறக்கப்பட்டது. மூவரையும் சிறைப்பிடித்து அழைத்துச் சென்றனர். நாட்டிலஸ் என்னும் இந்த நீர்மூழ்கிக் கப்பலை ஒரு விந்தையான விலங்கு என்று நான் எல்லோரையும் நம்ப வைத்துக் கொண்டிருக்கிறேன். இந்த உண்மை தெரிந்து கொண்ட நீங்கள் எக்காலத்திலும் இங்கிருந்து செல்ல முடியாது என்றார் நீர் மூழ்கிக்கப்பல் தலைவர் நெமோ கப்பலில் மிகச்சிறந்த நூலகம், அருங்காட்சியகமும் இருந்தன. கப்பல் கடலுக்கடியில் எவ்வளவு ஆழத்தில் இருக்கிறது | 7 |

எந்தக் கடலின் எந்தப் பகுதியில் இருக்கிறது என்று அறியும் வசதியும் இருந்தது கப்பல் செல்வதற்கும் விளக்குகள் எரிவதற்கும் தேவையான மின்சாரத்தைத் தயாரிக்கும் கருவிகள் உள்ளேயே இருந்தன. கப்பலுக்குள் இருக்கும் பெரிய தொட்டிகளை நிரப்புவது, காலி செய்வதன் மூலம் கப்பலை நீருக்கு அடியிலும் மேல் தளத்துக்கும் கொண்டு செல்ல முடிந்தது.

காற்றைப் புதுப்பித்துக்கொள்ள மேல் தளத்திற்குச் செல்ல வேண்டும். உடனடித் தேவைக்கு காற்றுப் பைகள் இருந்தன. காற்றுப்பைகளை முதுகில் கட்டிக்கொண்டு அதன் முகமூடியை முகத்தில் வைத்துக் கொண்டால் ஒன்பது மணி நேரம் வரை கடலுக்குள் நீந்த முடியும் என்றார் நெமோ. ஒருநாள் கடல் புற்று எனப்படும் மணல் திட்டில் கப்பல் சிக்கிக் கொண்டு விட்டது முழு நிலவு நாளன்று கடலில் நீர்மட்டம் உயரும்போது தான் அந்த இடத்தை விட்டுச் செல்ல முடியும் என்றார் நெமோ.

நெமோவிடம் இசைவு பெற்று பியரி, நெட் கான்சீல் ஆகியோர் ஒரு படகை எடுத்துக்கொண்டு அருகில் இருந்த தீவுக்குச் சென்றனர். அங்கிருந்து ஏராளமான காய்கறிகளைச் சேகரித்துக் கொண்டு படகுக்கு வந்த போது மனிதர்களைக் கொன்று தின்னும் வழக்கமுடையவர்கள் அவர்களைத் துரத்திக் கொண்டு வந்தனர் நீர்மூழ்கிக் கப்பலின் மேல் மூடியை இறுக மூடிக் கொண்டு தப்பித்தனர். ஏழாம் நாள் மூடியைத் திறந்தபோது வெளியே இருந்த அந்தீவு மனிதர்கள் உள்ளே கால் வைக்க முயற்சி செய்தனர். அந்த ஏணியில் மின்சாரம் பாய்ச்சி இருந்ததால் அலறிக்கொண்டு ஓட்டம் பிடித்தனர். பயணம் தொடர்ந்தது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் அருகில் கப்பல் சென்று கொண்டிருந்த போது முத்துக்குளிக்கும் தொழில் நடைபெறுவதைக் கண்டனர். காற்றுப் பைகளைக் கட்டிக்கொண்டு கொஞ்சம் முத்துச் சிப்பிகள் சேகரித்து வரலாம் என்று இறங்கினர். காற்றுப் பைகள் இல்லாமலேயே அங்கு இருக்கும் மனிதர்கள் முத்துக்குளிப்பதைக் கண்டு வியந்தனர். அப்போது அவர்களைத் தாக்க வந்த ஒரு சுறா மீனை றெமோ தம் கையில் இருந்த நீளமான வாளினால் குத்திக் கிழித்துக் காப்பாற்றினார்.

வழியில் பல விந்தைகளைக் கண்டார்கள். இங்கிலாந்துக்கும் ஸ்பெயினுக்கும் இடையே நடைபெற்ற போரில் கடலில் மூழ்கடிக்கப்பட்ட கப்பல் சிதைவுகளில் இருந்து தங்கம், வெள்ளி, வைரம் போன்றவற்றை அள்ளிக் கொண்டார்கள். எரிமலை கண்டு வியந்தார்கள். பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே பூகம்பத்தால் மூழ்கிப் போன அட்லாண்டிஸ் என்னும் பெருநகரத்தின் இடிபாடுகளைக் கண்டார்கள். பூமியின் தென் துருவத்தில் பென்குவின், கடல் சிங்கம் போன்ற அரிய பறவைகளையும் விலங்குகளையும் பார்த்தார்கள். திரும்பும் வழியில் மிகப்பெரிய ஆக்டோபஸ் ஒன்றுடன் போரிட்டு அதனைக் கொன்றார்கள்.

ஒருநாள் தொலைவில் கரை தெரிந்தது. மூவரும் கப்பலுடன் இணைந்து இருந்த சிறிய படகில் ஏறினார்கள். அப்போது நாட்டிலஸ் பெரும் கடல் சுழலுக்குள் சிக்கிக் கொண்டது. படகோடு தூக்கி எறியப்பட்ட மூவரும் கண்விழித்த போது நார்வே நாட்டின் கடற்கரையில் மீனவர் ஒருவரின் குடிசையில் இருந்தார்கள். நாட்டிலசுக்கு என்ன ஆனது என்பது பற்றியோ நெமோ என்ன ஆனார் என்பது பற்றியோ எந்தச்

| | | |
|---|---|---|
| | செய்தியும் கிடைக்கவில்லை. | |
| VIII | ஏதேனும் ஒன்றுக்கு மட்டும் விடையளிக்க. | 1x7=7 |
| 36 | எங்கள் ஊர்<br>முன்னுரை - அமைவிடம் - பெயர்க்காரணம் - தொழில்கள் - சிறப்புமிகு இடங்கள் - திருவிழாக்கள் – மக்கள் ஒற்றுமை - முடிவுரை<br>(கட்டுரை வடிவில் பொருத்தமாக இருப்பின் மதிப்பெண் வழங்குக) | 5 |
| 37 | பயணங்கள் பலவகை<br>முன்னுரை - பயணத்தின் தேவை – தரைவழிப்பயணம் - கடல்வழிப் பயணம் - வான்வழிப் பயணம் - முடிவுரை<br>முன்னுரை<br>வெள்ளிப் பனிமலையின் மீதுலாவுவோம்<br>அடிமேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம். என்றார் பாரதியார்.<br>தரை வழிப்பயணம், வான்வழிப் பயணம், கடல் வழிப் பயணம் என மனிதர்களின் பயணம் வெவ்வேறு விதமாக நடந்து கொண்டுதான் இருக்கிறது. பயணங்கள் பற்றிக் கட்டுரையில் காண்போம்.<br>பயணத்தின் தேவை.<br>திரைகடலோடியும் திரவியம் தேடு' என்றனர் நம் முன்னோர் வாணிகம் செய்வதற்காகவும் கல்வி கற்பதற்காகவும் கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்துவதற்காகவும் உறவினர்களைச் சத்திப்பதற்காகவும் வழிபாடுகள் செய்வதற்காகவும் திருவிழாக்களில் பங்கு பெறுவதற்காகவும் ஒவ்வொரு நாளும் நாம் பயணம் மேற்கொள்கிறோம்.<br>தரைவழிப்பயணம்.<br>மனிதன் மேற்கொண்ட முதல் பயணம் தரைவழிப் பயணம் ஆகும். சக்கரத்தைக் கண்டுபிடித்த பிறகுதான் நீண்ட தொலைவு தரைவழிப் பயணங்கள் செல்ல முடிந்தது சாலைப் போக்குவரத்து மற்றும் தொடர்வண்டிப் போக்குவரத்து மூலம் தரைவழிப் பயணம் நிகழ்கிறது. இயற்கைக் காட்சிகளைக் கண்டபடி தொடர் வண்டியில் செல்வதும் பாலங்களையும் குகைகளையும் கடக்கும்போது ஓர் இனிய அனுபவமாக இருக்கும். மாட்டு வண்டிகள் இரு சக்கர வண்டிகள், மூன்று சக்கர வண்டிகள், மகிழுந்து, சிற்றுந்து, பேருந்து, சரக்குந்து என்று பல வண்டிகள் தரைவழிப் பயணத்திற்கு உதவுகின்றன.<br>நீர்வழிப் பயணம். வணிகக் கப்பல்கள் மூலம் ஏற்றுமதி இறக்குமதி நடத்திய தமிழர்தம் துறைமுகங்களான முசிறி, புகார், கொற்கை ஆகியவை பற்றிய செய்திகள் உள்ளன. இன்றைக்கும் சரக்குக் கப்பல்கள் உலகெங்கும் உள்ள பொருள்களைச் சுமந்து உரிய இடத்திற்குக் கொண்டு செல்கின்றன. அக்காலத்தில் வெளிநாடுகளுக்குச் செல்ல கப்பல் போக்குவரத்து பெரும் உதவியாக இருந்தது நீர் மூழ்கிக் கப்பல்களும் இன்றைய நீர்வழிப் போக்குவரத்துக்கும் இராணுவச் சேவைக்கும் உதவுகின்றன.<br>வான்வழிப் பயணம்:<br>"வலவன் ஏவா வானூர்தி" என்ற புறநானூற்று வரிகள் அக்காலத்திலேயே வான்வழிப் போக்குவரத்து இருந்திருக்குமோ என்று எண்ண வைக்கின்றது விரைவாக நீண்ட தொலைவு பயணிக்க வான்வழிப் போக்குவரத்து பெரிதும் உதவுகிறது. விண்வெளியில் | 7 |

www.Padasalai.Net

| | |
|---|---|
| | தங்கி ஆய்வு செய்வதற்கு விண்வெளி ஓடங்கள் பயன்படுகின்றன செயற்கைக்கோள்களை நிலை நிறுத்துவதற்கு ஏவூர்திகள் பயன்படுகின்றன. எதிர் வரும் காலங்களில் ட்ரோன் முறையில் பறக்கும் தானியங்கி விமானங்களும் உள்நாட்டுப் பயணத்திற்குப் பெரிதும் உதவியாக இருக்கும்.<br>முடிவுரை:<br>நவீன போக்குவரத்து வசதிகளால் உலகம் சுருங்கி விட்டது என்றே கூறலாம். நினைத்த நேரத்தில் நினைத்த இடத்திற்குச் செல்ல தரை, நீர் மற்றும் வான்வழி மூலம் நாம் பயணம் செய்ய முடிகிறது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்றார் கணியன் பூங்குன்றனார். உலகம் முழுவதும் பயணம் செய்வோம்! உறவைப் பாலமாக்கி ஒற்றுமை வளர்ப்போம்! |


| ஆக்கம் | |
|---|---|
| இராஜ.வேல்முருகன்<br>நேரு மேல்நிலைப்பள்ளி, எறையூர்<br>வேப்பந்தட்டை வட்டம்,<br>பெரம்பலூர் மாவட்டம் - 621133 | பெ. ஜெயராமன்<br>அரசு மேல்நிலைப்பள்ளி, அம்மாபாளையம்,<br>பெரம்பலூர் வட்டம்,<br>பெரம்பலூர் மாவட்டம் - 621101. |


www.Padasalai.Net